# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1565/19 - 2008 සැප්තැම්බර් 05 වැනි සිකුරාදා - 2008.09.05

*1565/19 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 13 (ஈஈஈ) ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (ஈஈஈ) பந்தியினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமை அதிபதி சஹம்பதி அங்கம்மன ஆகிய நான் , ஏதேனும் உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலினை கொண்டு நடாத்தும் நெறிமுறையில் ஆற்றப்படும் சேவைகளாக (அத்தகைய சேவைகளாக வழங்கப்படும் ஏதேனும் ஊழியம் தொடர்பில் அல்லாதவை) அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சேவைகள் 2008/ 2009 ஆம் வரி மதிப்பீட்டாண்டிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் அப்பந்தியின் நோக்கங்களுக்காக இக்கட்டளை மூலம் குறிப்பீடு செய்யப்படுகின்றது.*

*சஹம்பதி அங்கம்மன,*
*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமை அதிபதி.*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,*
*சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,*
*கொழும்பு 2,*
*2008, செத்தெம்பர் 3.*

**அட்டவணை**

- ஒழுங்குபடுத்தப்பட்ட உயர்தொழில் ஒன்றின் உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் சேவைகளை வழங்கும் எவரேனும் ஒருவர் அத்தகைய அமைப்பில் ஈடுபடுவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தராதர இயலுமையினை கொண்டிருந்து அதனை செயற்படுத்தும் போது அங்கீகரிக்கப்பட்ட நடத்தை தராதரத்தினைக் கொண்டிருத்தல் ;
- கணக்கீடு, கணக்குப் பதிவு அல்லது கணக்காய்வு ;
- வரி ஆலோசனைச் சேவைகள் ;
- படவரைஞர் சேவைகள் ;
- பொறியியல் சேவைகள் ;
- மென்பொருள் அபிவிருத்தி, தரவு நிரற்படுத்தல், தரவு அடிப்படை அபிவிருத்தி அல்லது முறைமை வடிவமைப்பு ;
- இலங்கைக்கு வெளியே விளம்பரச் சேவைகள் ;
- ஆராய்ச்சிப் பணிகளும் அறிக்கை எழுதுதலும் ;

- புகைப்படச் சேவைகள் ;
- இலங்கைக்கு வெளியே வெளியீடுகள் ;
- இலங்கைக்கு வெளியே அலங்காரக்கலை, சிகையலங்காரம் அல்லது உருவப்படுத்தல் ;
- விளையாட்டு வீரர் அல்லது கலைஞர் ஒருவரின் சேவைகள் ;
- விலைமதிப்பீட்டாளர் அல்லது ஏலவிற்பனையாளர் சேவைகள் ;
- நீர்க்குழாய் இணைப்பாளர், மேசன் அல்லது தச்சர்களின் சேவைகள் ;
- கணியப்பட்டியல் சேவைகள் ;
- சுகாதார பராமரிப்புச் சேவைகள் ;
- இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் விவசாய ஆதனங்களின் முகாமைத்துவம் ;

*9 - 839*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.